[மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 22

மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பின்னாலும் 23–5–1978 அன்று சென்னையில் கர்நாடக மாநில அமைச்சரும் Minister for Information and youth Services) தமிழக அமைச்சர்களும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதற்குப் பின்னாலும் 17–8–1978 தமிழக மற்றும் கர்நாடக அதிகாரிகள் கலந்து பேசியிருக்கிறார்கள் ஆகவே, இந்தத் திட்டம் இன்று பரிசீலனையில் இருந்து வருகிறது. இது எவ்வளவு காலத்தில் முடியும் என்பதைப் பற்றியோ அல்லது அந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதைப்பற்றியோ திட்டவட்டமாக நாம் எதுவும் சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒகேனக்கல் மின் திட்டம் பொதுவாக தமிழகத்தில் இருக்கின்ற மின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலேயும், தருமபுரி மாவட்டத்திலே ஒரு மின் திட்டம் ஏற்படுத்தப்படுகின்ற வகையிலேயும், கர்நாடகத்திற்கு இருக்கின்ற மின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் தமிழக அரசும், கர்நாடக அரசும் இணைந்து செயல்படக்கூடிய திட்டத்தினைப் பற்றி ஆராயப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது குறித்து அடுத்த மாதம் இரண்டு முதலமைச்சர்களும் இணைந்து பேசப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மேலும் விரைவாக இந்தத் திட்டத்தினை உருவாக்க வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா, அவ்வாறு விரைவாக செயல்படுத்த இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, தமிழக முதல்வரவர்கள் இந்தத் திட்டத்தை எப்படியாவது சீக்கிரமாக முடிக்கவேண்டும் என்றும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்றும் கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். ஆகவே, தீவிரமான பரிசீலனைக்குப் பின்னாலே சீக்கிரமாக முடிப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் பால் விற்பனை நிலையங்கள்.

*வினா எண் 515. திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் பால்வள நிறுவனம் நடத்தும் பால் விற்பனை நிலையங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் விற்பனை நிலையங்கள் நீலகிரி மாவட்டத்தில் ஏதும் இல்லை.

(திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் எழுந்திருந்தார்)....

1979 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆறுமுகம் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவரும் ஒரு கட்சியினுடைய தலைவர். அலுவல் ஆய்வுக் குழுவில், கேள்விக்கு சம்பந்தப்பட்ட தொகுதியிலுள்ள உறுப்பினர்கள் மட்டும்தான் துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். இது நீலகிரி மாவட்டத்தைப் பற்றி கேள்வி. நீங்கள் சேலம் மாவட்டத்தை சேர்ந்தவர். இப்போது திரு. உச்சி.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பால் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு ஏராளமான பால் கிடைக்கின்ற சூழ்நிலை இருந்தும், ஜனங்களுக்கு நல்ல முறையில் பால் கிடைபபதில்லை. ஆகையால், நல்ல முறையில் பால் வழங்குவதற்கு அங்கு பால் விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நீலகிரி மாவட்டத்தில் பால்வள நிறுவனத்தின் மூலமாக (தமிழ்நாடு டயரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக) பால் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்பது கேள்வி. அதற்கு என்னுடைய பதில் இல்லை என்பது. ஆனால் அங்கு பால் உற்பத்தி சங்கங்கள் மூலமாக மக்கள் பாலை பெற்று வருகிறார்கள். மீதமுள்ள பால் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கு மிச்சமாகும் பாலை உபயோகித்து பால் பவுடர் தொழிற்சாலை அமைப்பது பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பெரிய நகரங்களில் எல்லாம் பால்வள நிறுவனத்தின் பால் விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பால்பெருக்கு இரண்டாவது திட்டத்தின் மூலமாக முக்கியமான நகரங்களுக்கு எல்லாம் பால் கொடுக்கவேண்டும் என்று அரசு திட்டங்களை போட்டு வருகிறது. அதைச் செயல்படுத்தும்போது, முக்கியமான நகரங்களில் எல்லாம்—குறிப்பாக பேரனாம்பட்டு போன்ற நகரங்களில் எல்லாம் நல்ல பாதுகாப்பாக பதப்படுத்தப்பட்ட பால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அனுமதித்ததற்கு நன்றி, மாண்புமிகு கிராமத் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, நீலகிரி மாவட்டத்தில் பால்வள நிறுவனத்தின் மூலமாக பால்வழங்கும் விற்பனை நிலையங்களை ஏற்படுத்த உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். அரசாங்கம்

கொள்கை அளவில் எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் மக்களுக்கு பாதுகாப்பான, தரமான, சுத்தமான பாலை பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்வதற்கு அரசாங்கத்தினிடத்தில் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலம் சென்னை, மதுரை போன்ற நகரங்களில் எல்லாம் பால் புட்டிகள் மூலமாக நல்ல தரமான, பாதுகாப்பான பால் வழங்கப்பட்டு வருகின்றது. மற்ற இடங்களில் எல்லாம் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பால் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த பால் வள நிறுவனத்தின் சார்பாக தற்போது பாட்டில்கள் மூலமாகவும், பாலிதின் பேக்குகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படும் பாலிதின் பேக்குகளில் சிறு துவாரத்தைப்போட்டு அதன் மூலமாக பாலை எடுத்துக்கொள்வதாகத் தெரிகிறது. ஆகவே, இப்படி பாலிதின் பேக்குகளில் துவாரத்தை போடுபவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பாலிதின் பேக்குகளில் இப்படி துவாரங்கள் போட்டு பாலை எடுத்துக்கொள்கிறார்கள் என்ற புகார்கள் எதுவும் வரவில்லை. அப்படிப்பட்ட புகார்கள் வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். பாலிதின் பேக்குகளில் பாலை அடைத்து வழங்கும்போது, அவை அந்தந்த பூத்துகளில் வந்தவுடன் அங்கிருந்து மக்கள் உடனடியாக வாங்கிச் சென்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட தவறு நடந்திருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு புகார் வருமானால் அதன் மீது தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கேர்' நிறுவனத்திடம் வாங்கிய பால் பவுடர்.

*வினா எண் 516—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1973–74-ம் ஆண்டில் 'கேர்' நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு பால் பண்ணை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பால் பவுடரின் அளவு என்ன ?

(ஆ) அதன் மூலம் எத்தனை லிட்டர் பால் தயாரிக்கப் பட்டு விநியோகம் செய்யப்பட்டது ?